பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

JESUS REDEEMS MINISTRIES

# இயேசு விடுவிக்கிறார்

*Volume: 46 Issue: 06 June 2025 Mohan C. Lazarus Annual Subscription: ₹ 50/- Single Copy: ₹ 5/-*



"பயப்படாதே,
நீ வெட்கப்படுவதில்லை."

ஏசாயா 54:4.

# உங்கள் சகோதரனிடமிருந்து...

கர்த்தரும், இரட்சகருமாக இருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் **வாழ்த்துக்கள்!**

இம்மட்டும் நமக்கு உதவி செய்து வருகிற **கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!** நீங்களும், உங்கள் வீட்டார் எல்லோரும் சுகமாக இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நானும், நம் '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியக் குடும்பத்தினர் யாவரும் தேவ கிருபையினாலும், உங்களுடைய ஜெபத்தினாலும் நலமாக இருக்கிறோம்.

கடந்த (2025) மே மாதத்தில் நடைபெற்ற **எழுப்புதல் பெருவிழா**க்களை கர்த்தர் அபரிவிதமாக ஆசீர்வதித்துக் கொடுத்தார். இந்தப் பெருவிழாக்களில், சுமார் **50,000**க்கும் அதிகமான ஜனங்கள் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதில், சுமார் 15,000க்கும் அதிகமான ஜனங்கள், 'இயேசு விடுவிக்கிறார்' ஊழிய வளாகத்தில் தங்கியிருந்து பெருவிழாக்களில் பங்கு பெற்றார்கள்.

இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும், **சிங்கப்பூர்**, **இலங்கை**, **ஜப்பான்**, **அமெரிக்கா** ஆகிய வெளி தேசங்களிலிருந்தும் அனேக தேவ ஜனங்கள் வந்து, இந்த எழுப்புதல் பெருவிழாக்களில் பங்கு பெற்று ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

தினமும் காலை 5:00 மணிமுதல், இரவு 12:30 மணிவரை, துதி ஸ்தோத்திரங்களும், தேவ செய்திகளும், ஜெபங்களும் ஏறெடுக்கப்பட்டது. அவைகள் ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எண்ணிக்கைக்கு அடங்காத அனேக மகிமையான காரியங்களைச் செய்து, மகிமைப்பட்டார்!

திரளான சிறு பிள்ளைகள் மற்றும் வாலிபர்கள் மீது ஆவியானவர் பலமாக ஊற்றப்பட்டார்! அனேகர் தரிசனங்களைக் கண்டு, சாட்சி சொன்னார்கள்! அனேகர் பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலை மற்றும் சுகத்தை பெற்றுக் கொண்டார்கள்!

ஒவ்வொரு பெருவிழாக்களிலும் கர்த்தர் அனேக அற்புதங்களைச் செய்து, தம்முடைய சத்திய வசனத்தை உறுதிப்படுத்தினார்! ஏராளமான **ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டார்கள்!** ஆயிரத்திற்கும் அதிகமான அற்புதங்களை கர்த்தர் செய்தார்! அற்புதங்களை பெற்றுக் கொண்ட அனேகர் சாட்சி சொல்லி, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்! **எழுப்புதல் அக்கினி பரவ ஆரம்பித்து விட்டது!** அதற்காக **கர்த்தரை துதியுங்கள்!**



இந்த மாதத்தில் **லண்டன்** பட்டணத்தில், [2 நாட்கள்] ஊழியங்கள் நிறைவேற்றப்பட இருக்கிறது. ஒருநாள் இங்கிலாந்து தேசத்திற்காக **உபவாச ஜெபமும்**, இன்னொரு நாள் **அற்புதப் பெருவிழா**வும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கர்த்தருக்குச் சித்தமானால், வருகிற (2025) **ஜூலை** மாதம் **அமெரிக்கா** தேசத்திலுள்ள **வாஷிங்டன்-D.C.**, **லாஸ்வேகாஸ்**, **டெக்சாஸ்** ஆகிய 3 இடங்களில், அந்த தேசத்தின் எழுப்புதலுக்காக **உபவாச ஜெபக் கூட்டம்** நடத்தப்பட இருக்கிறது.

மட்டுமல்ல, தென் அமெரிக்கா நாடான **பிரேசில் தேசத்திலும்** எழுப்புதலுக்கான **ஜெபக் கூட்டங்கள்** ஒழுங்கு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த ஊழியங்களுக்காக **உங்கள் ஜெபம் அதிகமாகத் தேவை**. ஜெபித்துக் கொள்ளுங்கள். நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்!

கிருபை உங்களோடிருப்பதாக!

**உங்கள் சகோதரன்,**

Mohan C L.



# “பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை.”

ஏசாயா 54:4.

பிரியமானவர்களே,

இன்றைக்கு நீங்கள் எதோவொரு காரியத்தை குறித்து பயந்து, “இது எப்படி முடியுமோ?” என்று எண்ணி கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா? “நான் ஜெயம் பெறுவேனா? என்னுடைய வாழ்க்கையில் எதாவது நன்மையான காரியங்கள் நடக்குமா? என் மீது இருக்கிற நிந்தைகளும், அவமானங்களும் நீங்குமா?” என்று சொல்லி, எதோவொரு காரியத்தை குறித்து நீங்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா?

கர்த்தர் இன்றைக்கு உங்களைப் பார்த்துத்தான், “**பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை;...**” (ஏசாயா 54:4) என்று சொல்கிறார்.

அதாவது, “என் மக(னே)ளே, **நீ பயப்படாதே! நீ வெட்கப்படுவதில்லை!**” என்று, உங்கள் மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்கிறார்.

அவர் உங்களை வெட்கப்பட விடவே மாட்டார். ஆகவே, **நீங்கள் எதைக் குறித்தும் கலங்காதீர்கள்! நீங்கள் பயப்படுகிறபடி, உங்கள் வாழ்க்கையில் எதுவும் சம்பவிப்பதில்லை!**

எனக்கு அன்பானவர்களே, “**உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்;...**” (ஏசாயா 61:7) என்று, கர்த்தர் உங்களுக்குச் சொல்கிறார்.

கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்திருந்த ஒரு வாலிபன், தன்னுடைய மேல் படிப்பிற்காக பல இடங்களுக்கு விண்ணப்பித்து விட்டு, “கர்த்தர் எனது மேல் படிப்பிற்கான ஒரு வழியை திறப்பார்!” என்று நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் காத்திருந்தான். கல்லூரிகளெல்லாம் மறுபடியும் திறந்து, அவனோடு கூட படித்த மாணவர்களில் அனேகர் மேல் படிப்பிற்காக சென்று விட்டார்கள்.

ஆனால், அவனுக்கு ஒரு கல்லூரியிலிருந்தும் பதில் வரவில்லை. பலரும் அவனிடத்தில் அவனுடைய மேல் படிப்பைக் குறித்து விசாரிக்கும்போது, “இயேசு கிறிஸ்து எனக்கொரு வழியை திறப்பார்!” என்று விசுவாசத்தோடு சொல்வான்.

அதற்கு அவர்கள் அவனைப் பார்த்து, “கல்லூரிகளெல்லாம் மறுபடியும் திறந்து, எல்லோரும் மேல் படிப்பிற்காக போய் விட்டார்கள். இனி உனக்கு எங்கே இடம் கிடைக்கப் போகிறது?” என்று சொல்லி, அவனை கேலி செய்தார்கள்.

திடீரென்று ஒருநாள், மேல் படிப்பிற்கு வந்து சேர்ந்து கொள்ளும்படியாக, 2 பிரபலமான கல்லூரிகளிலிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. இப்போது, 'எந்தக் கல்லூரியை தேர்ந்தெடுப்பது?' என்று அவன் யோசிக்கக் கூடிய அளவிற்கு, எல்லோரும் ஆச்சரியப்படும்படியாக கர்த்தர் அவனுக்கொரு வழியைத் திறந்து கொடுத்தார்.

பாருங்கள், அந்த வாலிபனை கர்த்தர் வெட்கப்பட விடவில்லை!

**"உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்;..."** (ஏசாயா 61:7) என்று சொல்லியிருக்கிற கர்த்தருடைய வாக்குத்தத்தம் எவ்வளவு உண்மையுள்ளதாக இருக்கிறதென்று பாருங்கள்!

உங்களையும் கர்த்தர் வெட்கப்பட விட மாட்டார். உங்களுடைய வெட்கத்திற்குப் பதிலாக, இரண்டத்தனையான பலன் உங்களுக்கு வரும்.

ஆனால், 'வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையான பலனை கர்த்தர் யாருக்கெல்லாம் கொடுப்பார்?' என்பதை பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். நீங்களும் அதற்கென்று உங்களை அர்ப்பணித்து, கர்த்தரிடத்திலிருந்து இரண்டத்தனையான பலனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# தேவனுடைய பிள்ளைகள் வெட்கப்பட்டுப் போவதில்லை!

";... **என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.**" (யோவேல் 2:26) என்று கர்த்தர் சொல்லி இருக்கிறார். ஆம், தேவனுடைய ஜனங்களாக இருக்கிற தேவ பிள்ளைகள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை!

அப்படியானால், யார் தேவனுடைய பிள்ளைகள்?

**"அவருடைய** (இயேசு கிறிஸ்துவின்) **நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்."** (யோவான் 1:12) என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது.

எனக்கு அன்பானவர்களே, இன்றைக்கு நீங்கள் உங்கள் வாழ்க்கையில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள் பாவங்களை விட்டு நீங்கள் மனந்திரும்பி, 'தேவனுடைய பிள்ளை!' என்கிற அனுபவத்தைப் பெற்றிருக்கிறீர்களா?

நீங்கள் அந்த அனுபவத்தைப் பெற்றிருப்பீர்களானால், உங்களை கர்த்தர் கட்டாயம் வெட்கப்பட விடவே மாட்டார். ஒருவேளை இன்னும் நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பீர்களானால், உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இன்றைக்கு இந்தச் செய்தியின் மூலமாக உங்களை சந்திக்கிறார்.

'**பெத்தானியா**' என்கிற ஒரு கிராமத்தில் வசித்த, '**மார்த்தாள்**', '**மரியாள்**' என்கிற 2 சகோதரிகளுக்கு, '**லாசரு**' என்கிற ஒரு சகோதரன் இருந்தான். அவர்கள் இயேசு கிறிஸ்துவை தங்களுடைய தகப்பனைப்போல நேசித்தார்கள். அவரும் அவர்களை பிள்ளைகளைப்போல நேசித்தார்.

ஒரு கட்டத்தில், லாசரு வியாதிப்பட்டு மரண படுக்கையில் இருந்தபோது, மார்த்தாளும், மரியாளும் அதை இயேசு கிறிஸ்துவுக்கு தெரிவிக்கும்படியாக ஒரு மனிதனிடத்தில் சொல்லி அனுப்பினார்கள். ஆனால், அவர் உடனே வரவில்லை.

மார்த்தாளும், மரியாளும், 'இயேசு கிறிஸ்து வந்து தங்கள் சகோதரனை குணமாக்கி விடுவார்.' என்று நம்பிக்கையோடு காத்திருந்தார்கள். ஆனால், லாசரு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, 4 நாட்கள் கழித்துத்தான் இயேசு கிறிஸ்து வந்தார்.

அந்த சமயத்தில், "இயேசு கிறிஸ்துவை தங்கள் தகப்பனைப்போல நேசித்து ஏற்றுக் கொண்ட இந்தக் குடும்பத்திற்கு ஏன் அவர்

அற்புதம் செய்யவில்லை? தன்னை நேசித்த இந்த ஏழைப் பிள்ளைகளுக்கு இயேசு கிறிஸ்து உதவி செய்யவில்லையே?" என்று சொல்லி, பல விதமான கேள்விகளை அந்த ஊர் மக்கள் எழுப்பி இருப்பார்கள். அந்த சூழ்நிலையில், மார்த்தாளும், மரியாளும் வெட்கப்பட்டு, கலங்கிப் போய் இருந்திருப்பார்கள்!

என்றாலும் இயேசு கிறிஸ்து வந்து, மரித்து அடக்கம் பண்ணப்பட்டிருந்த லாசருவை மறுபடியும் உயிரோடு எழுப்பினார்.



அவர் தன்னை ஏற்றுக் கொண்டிருந்த தன்னுடைய பிள்ளைகளை வெட்கப்பட விடவில்லை.

அன்றைக்கு மாத்திரமல்ல, இன்றைக்கும் இயேசு கிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்கு அற்புதம் செய்து, அவர்களுடைய வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையான பலனை அவர்களுக்கு கொடுக்கிறார்.

ஒரு சமயம், அனேக வருடங்களாக எவ்வளவோ பிரயாசப்பட்டும், தன்னுடைய மகளுடைய திருமணக் காரியம் ஒழுங்காகாத நிலைமையில், ஒரு தாயார் அவளுடைய திருமணக் காரியத்திற்கு ஜெபிக்கும்படியாக என்னிடத்தில் கேட்டுக் கொண்டார்கள். அந்த மகளுக்கு வயது கடந்து போய் கொண்டே இருந்தது.

அந்தத் தாயாரிடத்தில் நண்பர்களும், உறவினர்களும் மகளுடைய திருமணக் காரியத்தைப் பற்றி விசாரிப்பார்கள். அது அவர்களுக்கு மிகுந்த வேதனையாகவும், வெட்கமாகவும் இருந்தது. ஆகவே, அந்தத் தாயார் தன் மகளை வெளியே உறவினர்களுடைய வீடுகளுக்கு அழைத்துச் செல்ல வெட்கப்பட்டார்கள்.

"30 வயதுக்கு மேல் இனி உங்கள் மகளை யார் திருமணம் செய்து கொள்வார்கள்?" என்று, மற்றவர்கள் கேட்கிற கேள்விகளுக்கு அந்தத் தாயார் பதில் சொல்ல முடியாமல் வெட்கப்பட்டு, மனதளவில் கலங்கிப் போய் விடுவார்கள்.

"நாங்கள் கர்த்தருடைய பிள்ளைகளாக இருந்தும், எங்களுக்கொரு நன்மையான காரியம் இன்னும் நடக்கவில்லையே!" என்று சொல்லி, கண்ணீர் வடித்தார்கள். நான் அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, ஜெபித்து அனுப்பி வைத்தேன்.

ஜெபத்தைக் கேட்ட கர்த்தர், தனக்கு பயந்த நல்லதொரு வாழ்க்கைத் துணையை அந்த மகளுக்கு வாய்க்கப் பண்ணினார். "இவளுக்கு இப்படிப்பட்ட ஒரு மாப்பிள்ளை எப்படி கிடைத்தான்?" என்று உறவினர்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டுச் சொல்லும்படியாக, அவளுடைய திருமணத்தை கர்த்தர் மிகுந்த ஆசீர்வாதமாக நடத்திக் கொடுத்தார்.

பாருங்கள், கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளை வெட்கப்பட விடவில்லை. அவர்களுடைய வெட்கத்திற்குப் பதிலாக, இரண்டத்தனையான பலன் அவர்களுக்கு வந்தது.

அதே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களுக்கும் செய்வார். **நீங்கள் அவருடைய பிள்ளையாக இருந்தால், உங்களை அவர் வெட்கப்பட விடவே மாட்டார்**.

உங்கள் குடும்பத்தில், உங்கள் வேலையில், உங்கள் படிப்பில் கர்த்தர் அற்புதம் செய்வார். உங்கள் வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையான பலன் உங்களுக்கு வரும்.

ஆகவே, ஆசீர்வதிக்கிற கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவை உங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்**. ஒருவேளை, நீங்கள் அவரை இன்னும் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பீர்களானால், இன்றைக்கே உங்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பி, **அவருடைய பிள்ளையாக மாறி விடுங்கள். அப்பொழுது நீங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை!**

# இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை!

"**அவரை** (இயேசு கிறிஸ்துவை) **விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது**." ரோமர் 10:11.

மட்டுமல்ல, "**விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்**." (எபிரெயர் 11:6) என்று, கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது.

அதாவது, **நீங்கள் விசுவாசிக்க வேண்டும்**. அதைத்தான் கர்த்தர் உங்களிடத்தில் எதிர்பார்க்கிறார். நீங்கள் விசுவாசித்தால்தான், இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்து உங்களால் அற்புதங்களை பெற்றுக் கொள்ள முடியும். நீங்கள் அவரிடத்திலிருந்து எந்த ஆசீர்வாதத்தைப் பெற வேண்டுமானாலும், **விசுவாசிக்க வேண்டும்.**

"இயேசு கிறிஸ்து இந்த நன்மையை எனக்கு தருவார்!" என்று நீங்கள் **உறுதியாக விசுவாசிக்க வேண்டும்**. விசுவாசம் இல்லாமல், எந்தவொரு நன்மையையும் இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளவே முடியாது.

ஏனென்றால், அவர் நம்முடைய **விசுவாசத்தைக் கனப்படுத்துகிற தேவன். அவரை விசுவாசிக்கிறவர்கள் வெட்கப்பட்டுப் போவதே இல்லை.** ஆகவே, உங்கள் விசுவாசத்தை விட்டு விடாதீர்கள். உங்கள் விசுவாசத்தில் எப்பொழுதும் நீங்கள் உறுதியாகவே இருங்கள்.

எங்களுடைய ஊழியத்தில் உதவி செய்கிற ஒரு சகோதரருடைய நண்பரின் வாழ்க்கையில் நடந்த ஒரு அற்புதத்தை மிகுந்த ஆச்சரியத்தோடு என்னிடத்தில் இப்படியாகச் சொன்னார்:

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட அவருடைய நண்பர், தன்னுடைய வாழ்க்கையில் மிகுந்த தரித்திரத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தார். ஆனால், சாப்பாட்டிற்கே வழியில்லாத அந்த நிலைமையிலும், கர்த்தர் மீது தான் வைத்திருந்த விசுவாசத்தை அவர் விட்டு விடவே இல்லை. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு காரியத்திற்கும் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அற்புதங்களைக் கண்டார்.

பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருந்த அவருடைய ஒரு சிறிய மகனுக்கு ஒரு 10 ரூபாய் கொடுத்து, பள்ளிக் கூட 'பேட்ஜ்' வாங்கிக் கொடுக்க அவருக்கு வழியில்லை. அவர் கர்த்தருடைய முகத்தை நோக்கி, "இயேசுவே, அன்றைக்கு எலியாவை காகத்தைக் கொண்டு போஷித்தீரே! எனக்கும் அப்படிப்பட்ட ஒரு அற்புதத்தை இன்றைக்கு செய்யும்." என்று சொல்லி, கண்ணீரோடும், மிகுந்த விசுவாசத்தோடும் ஜெபித்தார்.



என்ன ஆச்சரியம் பாருங்கள்; சற்று நேரத்தில் ஒரு காகம் பறந்து வந்து அவரருகில் எதையோ ஒன்றை போட்டு விட்டுப் போனது. அவர் அதை எடுத்துப் பார்த்தபோது, அது அவருடைய மகன் படித்துக் கொண்டிருந்த அந்தப் பள்ளிக் கூட பேட்ஜ்!

எவ்வளவு பெரியவொரு அற்புதம் என்று பார்த்தீர்களா? அது, ஒரு 10 ரூபாய் மதிப்புள்ள ஒரு சிறிய காரியமாக இருக்கலாம்! என்றாலும், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஜெபித்த அந்த சகோதரனுக்கு கர்த்தர் செய்தது, ஒரு மாபெரும் அற்புதம் அல்லவா?

பாருங்கள்; இயேசு கிறிஸ்து தன்னை விசுவாசித்து ஜெபித்த அந்த சகோதரனுடைய விசுவாசத்தை கனப்படுத்தி ஒரு அற்புதத்தைச் செய்து, அவர்களை சந்தோஷப்படுத்தினார். அவர், தன்னை விசுவாசித்த அந்த சகோதரனை வெட்கப்பட விடவில்லை.

அந்த சகோதரன் அற்பமான அந்த ஒரு சிறிய காரியத்திற்காக இயேசு கிறிஸ்துவை நோக்கிக் கூப்பிட்டபோது, அவர் அவ்வளவு கவனமாக பதில் கொடுப்பாரானால், நீங்கள் விசுவாசத்தோடு அவரிடத்தில் கேட்கிற ஒவ்வொரு காரியத்திலும் அற்புதம் செய்வது எவ்வளவு நிச்சயம்!

ஆகவே, நீங்களும் **இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள்!**

உங்கள் **வெற்றிக்காக அவரை விசுவாசியுங்கள்!**

உங்கள் **வேலைக்காக அவரை விசுவாசியுங்கள்!**

உங்கள் **சுகத்திற்காக அவரை விசுவாசியுங்கள்!**

உங்கள் **தேவைகளுக்காக அவரை விசுவாசியுங்கள்!**

உங்கள் **விடுதலைக்காக அவரை விசுவாசியுங்கள்!**

உங்கள் **அற்புதத்திற்காக அவரை விசுவாசியுங்கள்!**

அப்போது **நீங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டு போவதே இல்லை!**

ஏனென்றால், விசுவாசத்தோடு நீங்கள் ஜெபிக்கிற எந்தக் காரியத்திலும் அற்புதங்களை காண்பீர்கள்! உங்கள் வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையான பலன் உங்களுக்கு வரும்!

# கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை!

"... **நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்பதை அப்பொழுது அறிந்துகொள்வாய்:"** (ஏசாயா 49:23) என்று கர்த்தர் சொல்கிறார்.

மனிதர்களுடைய வார்த்தைகளை நம்பி, அவர்களுக்கு காத்திருந்தவர்கள் வெட்கப்பட்டுப் போனதுண்டு! ஆனால், **கர்த்தருடைய வார்த்தைகளை விசுவாசித்து, அவருக்கு காத்திருந்தவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை!**



ஆபிரகாமை கர்த்தர் அழைத்தபோது, "உன் சந்ததியை நான் பெருகப் பண்ணுவேன்!" என்று வாக்குக் கொடுத்தார். ஆபிரகாம் கர்த்தருடைய அந்த வார்த்தையை விசுவாசித்து, 25 வருடங்கள் மிகுந்த பொறுமையாக காத்திருந்தார். வயதான அவருடைய சரீரம் செத்துப் போய் விட்டது! இனி குழந்தை பிறக்க வாய்ப்பே இல்லை! என்றாலும், "கர்த்தர், தான் சொன்னபடியே எனக்குச் செய்வார்!" என்று விசுவாசத்தோடு காத்திருந்தார்.

பாருங்கள்; ஆபிரகாம் வெட்கப்பட்டுப் போகவில்லை. கர்த்தர் அவருடைய 100வது வயதில் ஒரு குழந்தையைக் கொடுத்து, அவருடைய சந்ததியை பெருகச் செய்தார். கர்த்தர் அவரை வெட்கப்பட விடவில்லை.

ஆபிரகாமின் தேவன், அவர் நம்முடைய தேவன்! அவர் உங்களுடைய தேவன்! உங்களையும் அவர் வெட்கப்பட விட மாட்டார். **விசுவாசத்தோடு** காத்திருங்கள்! **பொறுமையோடு காத்திருங்கள்!** கர்த்தர் உங்களுக்கு நிச்சயமாக அற்புதம் செய்வார்! **நீங்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை!**

ஊழியத்தின் நிமித்தமாக நான் ஒருமுறை மும்பை பட்டணத்திற்குச் சென்றிருந்த சமயத்தில், ஒரு தம்பதியினர் என்னை சந்தித்து ஜெபிக்க வந்திருந்தார்கள்.

அவர்கள் என்னிடத்தில், "ஐயா, எங்களுக்கு திருமணமாகி 22 வருடங்கள் ஆயிற்று! கர்த்தர் எங்களுக்கு ஒரு குழந்தை பாக்கியத்தை அருளும்படி எங்களுக்காக ஜெபியுங்கள்." என்று கேட்டுக் கொண்டார்கள்.

அவர்கள் கர்த்தர் மீது வைத்திருந்த விசுவாசமும், இத்தனை வருடங்களாக அந்த ஆசீர்வாதத்திற்காக கர்த்தரை விட்டு விலகாமல் அவர்கள் காத்திருந்ததும் எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது.

"ஆண்டவரே, உம்முடைய அற்புதத்திற்காக காத்திருக்கிற இந்த பிள்ளைகளை நீர் வெட்கப்பட விடாதிரும். ஒரு அற்புதத்தைச் செய்து, அவர்களை சந்தோஷப்படுத்தும்." என்று சொல்லி, ஜெபித்து அனுப்பினேன்.

ஒரு வருடம் கழித்து, மறுபடியும் நான் ஊழியத்திற்காக மும்பைப் பட்டணத்திற்குப் போயிருந்தபோது, அந்தத் தம்பதியினர், கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்திருந்த ஒரு குழந்தையோடு சந்தோஷமாக வந்து என்னை சந்தித்தார்கள்.

இயேசு கிறிஸ்து எவ்வளவு நல்லவர் என்று பாருங்கள்! அவர், தனக்கு காத்திருந்த பிள்ளைகளை அவர் வெட்கப்பட விடவில்லை! அற்புதம் செய்து அவர்களை மகிழப் பண்ணினார்!

**உங்களையும் அவர் வெட்கப்பட விட மாட்டார்!** நீங்கள் கர்த்தருக்கு காத்திருங்கள்! விசுவாசத்தோடு காத்திருங்கள்! அப்பொழுது உங்கள் வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையான பலன் உங்களுக்கு வரும்.

"**பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை! உன் வெட்கத்திற்கு பதிலாக இரண்டத்தனையாய் பலன் வரும்!**" என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்கிறார்.

இந்த வாக்குத்தத்தம் உங்களுக்குத்தான்! இந்த வாக்குத்தத்தத்தை விசுவாசத்தோடு உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டு ஜெபியுங்கள். அப்போது கர்த்தர் உங்களுக்கு அற்புதம் செய்து, உங்கள் வெட்கத்திற்கு பதிலாக இரண்டத்தனையான பலனை உங்களுக்குக் கொடுத்து, உங்களை ஆசீர்வதிப்பார்!

விசுவாசத்தோடு இந்த ஜெபத்தை ஏறெடுங்கள்.



வாக்குத்தத்தங்களின் தேவனே,

இன்றைக்கு நீர் எனக்குத் தந்திருக்கிற, "**பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை;**" [ஏசாயா 54:4] என்கிற உம்முடைய இந்த வாக்குத்தத்தத்திற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

நான் உம்முடைய இந்த வாக்குத்தத்தத்தை விசுவாசத்தோடு எனக்கு சொந்தமாக்கிக் கொள்கிறேன்!

நீர் எனக்கு வாக்குக் கொடுத்தபடியே, என்னை வெட்கப்பட விடுவதில்லை என்பதை நான் விசுவாசிக்கிறேன்!

என்னுடைய இந்தக் காரியத்தில் நான் வெட்கப்பட்டுப் போவதில்லை! அதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

என் வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையான பலனை நீர் எனக்குத் தருவதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

விசுவாசத்தோடு உம்மிடத்திலிருந்து ஒரு அற்புதத்தை நான் எதிர்பார்க்கிறேன்!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஆமென்! ஆமென்!

சென்னை மாநகரச் செய்திகள்!

# சென்னை எழுப்புதல் உபவாச ஜெபத்தில் வெளிப்பட்ட தேவ மகிமை!

எழுப்புதலை பரவச் செய்வதற்காக கர்த்தர் தெரிந்து கொண்ட மிக முக்கியமான பட்டணங்களில் ஒன்று, **சென்னை!** நம்முடைய ஜெபத்தின் நிமித்தமாக, இன்றைக்கு சென்னையில் அனேக மாற்றங்களைக் காண முடிகிறது. பெண்களுக்குப் பாதுகாப்பான நகரங்களில், இன்றைக்கு இந்தியாவிலேயே சென்னைதான் முதன்மையாக திகழ்கிறது.

சென்னையில் மேலும் பல ஆவிக்குரிய மற்றும் சமுதாய மாற்றங்களை காண்பதற்காக, கடந்த (2025) ஏப்ரல் 19ம் தேதியன்று, சென்னை-**இராயப்பேட்டை-** Y.M.C.A. **வளாகத்தில்** வைத்து, (காலை 9:00 - மாலை 4:00) **7 மணி நேர எழுப்புதல் உபவாச ஜெபம்** நடைபெற்றது. இந்த ஜெபத்தில், சுமார் **5,000**க்கும் அதிகமான ஜனங்கள் கலந்து கொண்டு, தேசத்தின் எழுப்புதல் மற்றும் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தார்கள்.

பாடல்-ஆராதனை வேளையைத் தொடர்ந்து, சகோ. **சாம் ஜெபராஜ்** அவர்கள் **ஸ்தோத்திர ஜெபத்தை** ஏறெடுத்தார்கள்.



நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், இந்தியாவின் எருசலேமாகிய சென்னையில், **எழுப்புதல் அக்கினி பரவ வேண்டியதை குறித்தும்**, திருச்சபை விசுவாசிகள் அனைவரும் **எழுப்புதல் சிந்தை உள்ளவர்களாக மாற வேண்டியதின் அவசியத்தை குறித்தும்** தெளிவாக எடுத்துரைத்து, அதன் அடிப்படையில் ஜனங்களை ஜெபத்தில் வழி நடத்தினார்கள்.

முதல் பகுதியில், 'தீர்க்கதரிசி' சகோ. **வின்சென்ட் செல்வக்குமார்** அவர்கள், '**எழுப்புதல் யுத்தம்!**' என்கிற தலைப்பில் கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டு, ஜனங்கள் மீது விசேஷித்த தேவ அபிஷேகம் ஊற்றப்பட ஜெபித்தார்கள். கர்த்தர் ஒவ்வொருவரையும் தம்முடைய அக்கினி அபிஷேகத்தினால் நிரப்பினார்.

அதனை தொடர்ந்து, நமது சகோதரர் அவர்கள், '**இயேசு கிறிஸ்துவின் சீடர்கள்!**' என்கிற தலைப்பில் கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டு, வந்திருந்த ஜனங்களின் ஆசீர்வாதத்திற்காகவும், ஆவிக்குரிய பெலத்திற்காகவும் ஜெபங்களை ஏறெடுத்தார்கள்.

இந்த ஜெபத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும், '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியத்தின் **அறங்காவலர்கள்** மற்றும் '**ஆசீர்வாதமான சென்னை**' **கமிட்டி உறுப்பினர்கள்** இணைந்து சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள்.

இந்த உபவாச ஜெபத்தின் மூலமாக சென்னையில் தேவ மகிமை பிரத்தியட்சமாக வெளிப்பட்டு, எழுப்புதல் அக்கினி போடப்பட்டது. அந்த எழுப்புதல் அக்கினி தேசமெங்கும் பற்றியெரிய **ஜெபியுங்கள்**.

– ஒருங்கிணைப்பாளர்.





# சேலத்தில் வெளிப்பட்ட தேவ வல்லமை!



**தே**வனாகிய கர்த்தருடைய வழி நடத்துதலின்படி, கடந்த (2025) ஏப்ரல் 12,13 தேதிகளில், **சேலம்**-கோட்டை C.S.I., மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் மாபெரும் **அற்புதப் பெருவிழா** ஒழுங்கு செய்யப்பட்டு, சிறப்பாக நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கான சகல விதமான ஏற்பாடுகளையும், சேலம்-'**இயேசு விடுவிக்கிறார்**' உலக எழுப்புதல் ஜெப மைய நிர்வாகிகள் மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள்.

இந்த 2 நாட்கள் கூட்டத்திற்கு தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும், அண்டை மாநிலங்களிலிருந்தும் மைதானம் நிரம்பி வழியும்படியாக திரள் கூட்ட மக்கள் கூடி வந்திருந்தார்கள். அதில் பெரும்பாலானோர் கிறிஸ்தவரல்லாத மக்கள்!

முதல் நாள் கூட்டத்தில், தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர், **மாண்புமிகு திரு. R. இராஜேந்திரன்** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தார்கள்.

2 நாட்கள் கூட்டத்திலும் நமது அன்பு சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்களை கர்த்தர் மிகுந்த வல்லமையாக பயன்படுத்தினார். முதல் நாள், '**சமாதானம் தரும் இயேசு!**' என்கிற தலைப்பிலும், 2வது நாள், '**பயத்திலிருந்து விடுவிக்கும் இயேசு!**' என்கிற தலைப்பிலும் வழங்கிய தேவ செய்தியானது, ஒவ்வொருவருக்குள்ளும் விசுவாசத்தை பெலப்படுத்தியது.

தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர், மாண்புமிகு திரு. R. இராஜேந்திரன்



முதல் நாள் கூட்டத்திலேயே தேவ வல்லமை பலமாக வெளிப்பட்டது. நமது சகோதரர் அவர்கள், "**குடிப் பழக்கத்திலிருந்து** விடுதலை பெற விரும்புவோர் மேடைக்கு முன்பாக வாருங்கள்." என்று அழைப்புக் கொடுத்தபோது, ஏராளமானோர் பகிரங்கமாக முன்பாக வந்து, ஜெபித்து **விடுதலையை பெற்றுக் கொண்டார்கள்**.

மட்டுமல்ல, சுமார் **35 வருடங்களாக மன நோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு சகோதரி பூரண விடுதலை**யைப் பெற்றுக் கொண்டார்கள்.

சுமார் **22 வருடங்களாக** முதுகில் '**கூன்**' விழுந்து, தலையை குனிந்தபடியே நடந்து கொண்டிருந்த ஒரு சகோதரனை கர்த்தருடைய கரம் தொட்டு, மிக அற்புதமாக அவருடைய **கூனை நிமிரச் செய்து**, நன்றாக **நடக்கப் பண்ணினார்**.

2வது நாள் கூட்டத்திலும் ஜெப வேளையில் ஆவியானவர் பலமாக இறங்கி வந்து, 'பாவம்', 'சாபம்', 'வியாதி' மற்றும் பிசாசின் பிடியில் சிக்கித் தவித்த நிலைமையில் வந்திருந்த அனேக ஜனங்களை விடுதலையாக்கினார். சுகம் மற்றும் விடுதலையை பெற்றுக் கொண்டவர்களில் அனேகர் சாட்சி சொல்லி, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். "**இயேசு கிறிஸ்து இன்றும் ஜீவிக்கிறார்!**" என்று, மறுபடியும் ஒருவிசை சேலம் பட்டணத்தில் நிரூபிக்கப்பட்டது.

ஏப்ரல் 11ம் தேதியன்று, சேலம்-**மூவேந்தர் அரங்கத்தில்** நடைபெற்ற **எழுப்புதல் ஊழியர் கூடுகை**யில் கலந்து கொண்ட, சுமார் **700 தேவ ஊழியர்**களும் வல்லமை வரங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.






ஏப்ரல் 12ம் தேதியன்று நடைபெற்ற **உபவாச ஜெபத்திற்கு** வந்திருந்த, சுமார் **3,000** தேவ பிள்ளைகளும் சேலம் மாவட்டத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள். இக்கூட்டத்தில் சகோ. **சாம் ஜெபராஜ்** அவர்கள் தேவ செய்தியளித்து, ஜனங்களை ஜெபத்தில் வழி நடத்தியபொழுது, அனேகர் சுகம் மற்றும் விடுதலையை பெற்று, சாட்சி சொல்லி கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.




இப்படியாக, சேலம் மாவட்டத்தில் விதைக்கப்பட்ட வேத வசனமாகிய விதைகள் நூறு மடங்கு பலன் கொடுத்து, கெம்பீரமான அறுவடையைக் காணவும், அங்குள்ள திருச்சபைகள் யாவும் வளர்ந்து பெருகவும் கர்த்தர் கிருபை செய்வாராக! **சேலம் மாவட்டத்தின் எழுப்புதலுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.**

– ஒருங்கிணைப்பாளர்.

## சேலம்–அற்புதப் பெருவிழாவில்
## இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களில் சில...

### [22 வருட] 'கூன்' நிமிர்ந்து, நடக்கிறேன்!

என் முதுகில் '**கூன்**' விழுந்து, சுமார் **22 வருடங்களாக குனிந்து** கொண்டேதான் **நடப்பேன்**. என்னை, 'கூனன்' என்று கிண்டலாகத்தான் கூப்பிடுவார்கள். அதற்காக அனேக நாட்களாக நான் அழுதிருக்கிறேன்.



ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள், "எலும்புகளில் கர்த்தருடைய வல்லமை இறங்குகிறது." என்று சொன்னார்கள். அந்த சமயத்தில் ஒரு தேவ வல்லமை என்னைத் தொட்டது. அந்நேரமே, **22 வருட கூன் நிமிர்ந்து, நன்றாக நடக்கிறேன். – ஹரிராம்**, சேலம்.

### [30 வருட] இருள் விலகி, விடுதலை!

**கெட்ட சிந்தனை**களின் நிமித்தமாக இரவில் **தூங்க முடியாமல், சமாதானம் இல்லாமல்**, சுமார் **30 வருடங்களாக** மிகவும் கஷ்டப்பட்டேன். எத்தனையோ நாட்கள், "மரித்துப் போய் விடலாம்!" என்று கூட நினைத்தேன்.



ஜெப வேளையில், என் இருதயத்திலிருந்து ஒரு இருள் வெளியேறிப் போனதை உணர்ந்தேன். அந்நேரமே **தற்கொலை எண்ணம் மாறி, பூரண விடுதலை**யை பெற்றுக் கொண்டேன். **– சாந்த மேரி**, சேலம்.

### சிறுநீரகம் செயல்பட்டது!

என் மகனுக்கு **பிறந்ததிலிருந்தே** அவனது இடது **சிறுநீரகம்** வீங்கி, **செயல்படாமல் இருந்தது**.



ஜெப வேளையில், கண்ணீரோடு ஜெபித்து விட்டுப் போனோம். கர்த்தர் பூரண சுகத்தைக் கொடுத்து, அந்த **சிறுநீரகத்தை செயல்பட வைத்தார். – பவித்திரா**, மல்லூர்.

## பெயர் சொல்லி அழைத்து, சுகம்!

சுமார் **7 வருட**ங்களாக சாப்பாடு **ஜீரணிக்காமலும், தூங்க முடியாமலும்** மிகவும் கஷ்டப்பட்டேன். எந்த டாக்டரிடத்தில் காண்பித்தாலும், "உனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை!" என்றுதான் சொன்னார்கள். ஆனாலும், எனக்கு அந்த பிரச்சனை இருந்து கொண்டேதான் இருந்தது.



ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள், ஆவியானவரின் ஏவுதலினால் **என் பெயரைச் சொல்லி அழைத்து**, தேவ கரம் என்னைத் தொட்டு, எனக்கு சுகத்தைத் தருவதாகச் சொன்னார்கள். அந்த சமயத்தில் தேவ வல்லமை என்னைத் தொட்டது. அந்நேரமே **7 வருட ஜீரணப் பிரச்சனை நீங்கி**, எனக்கு **சுகம்** உண்டானது. – **லூர்து மேரி**, சேலம்.

## உதிரப் போக்கு நின்று, சுகம்!

அதிகமான **உதிரப் போக்கினால்** சுமார் **4 வருட**ங்களாக கஷ்டப்பட்டேன். **மிகுந்த பெலவீனத்தோடு**தான் இந்த ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, **உதிரப் போக்கை நிறுத்தி**, எனக்கு **பூரண சுகத்தைக்** கொடுத்தார். – **ராஜேஸ்வரி**, சேலம்.



## (12 வருட) அசுத்த ஆவி விலகி, விடுதலை!

ஒரு **அசுத்த ஆவி**யின் போராட்டத்தினால், சுமார் **12 வருட**ங்களாக பாதிக்கப்பட்டேன். அதன் நிமித்தமாக தேவையில்லாத சிந்தனைகளோடும், கஷ்டங்களோடும் வாழ்ந்து வந்தேன்.

ஜெப வேளையில், ஆவியானவர் என்னை பலமாக ஆட்கொண்டபோது, எனக்குள்ளிருந்த அந்த **அசுத்த ஆவி** என்னை விட்டு **வெளியேறிப் போயிற்று**. இப்போது **பூரண விடுதலை**யோடு இருக்கிறேன். – **கோகிலா**, மகுடன்சாவடி.



## செவிட்டு காது திறந்தது!

திடீரென்று என் இடது **காது கேட்காமல்**, **5 வருட**ங்களாக மிகவும் கஷ்டப்பட்டேன். டாக்டர் பரிசோதித்து விட்டு, "காதுக்கு வருகிற நரம்பு பாதிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, நீங்கள் தொடர்ந்து மாத்திரை சாப்பிட வேண்டும்." என்று சொல்லி விட்டார்.



மாத்திரை சாப்பிட்டால் மயக்கம் வந்து, மரித்துப் போகிற நிலைமைக்குள் நான் சென்று விடுவேன். ஜெப வேளையில், கர்த்தருடைய கரம் என்னை தொடுவதை உணர்ந்தேன். அந்நேரமே, இடது **காது கேட்க ஆரம்பித்து விட்டது**. – **ரூத் மேரி**, சேலம்.

## (5 வருட) 'தைராய்டு' பிரச்சனை நீங்கியது!

**'தைராய்டு' பிரச்சனை**யினால், சுமார் **5 வருட**ங்களாக பாதிக்கப்பட்டிருந்தேன். ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள், ஆவியானவரின் ஏவுதலினால் **என் பெயரைச் சொல்லி அழைத்து**, எனக்காக **ஜெபித்தார்கள்**. அந்நேரமே **தைராய்டு பிரச்சனை** முற்றிலுமாக **நீங்கியது**. – **குளோரி**, அம்மாபேட்டை.



## (15 வருட) மந்திரக் கட்டிலிருந்து விடுதலை!

சுமார் **15 வருட**ங்களாக **மந்திரக் கட்டினால்** மிகவும் பாதிக்கப்பட்டிருந்தேன். இதற்காக சுமார் ₹ 60,000 வரை செலவு செய்தும் எந்தப் பிரயோஜனமும் இல்லை.

ஜெப வேளையில், நான் எப்படி மேடைக்கு முன்பாக வந்தேன் என்று எனக்கு தெரியவில்லை. அப்பொழுது கர்த்தர் எனக்கு இலவசமாக **பூரண விடுதலை**யைக் கொடுத்தார். – **நிர்மலா**, வாழப்பாடி.






கேரளா மாநிலம் - திருவனந்தபுரத்தில்
'இயேசு விடுவிக்கிறார்'
**உலக எழுப்புதல் ஜெப மையம்!**

**முகவரி மாற்றம்!**

பழைய முகவரி:
~~TC 14/986, Panchapura Junction, Extra Police Road, Palayam, Trivandrum - 33~~

**புதிய முகவரி:**
KVR - 247, Mulavana Junction, Thekkumoodu - Kannammoola Road, Trivandrum - 695 035.

அலுவலக நேரம்: தினமும் காலை 9:00 - இரவு 7:00.

தொடர்புக்கு: 92497 18266.



# மலேசியாவில் இயேசு கிறிஸ்து செய்த மகிமையான காரியங்கள்!

"கடைசிக் கால மகிமையான எழுப்புதலில், இந்திய தேசத்திற்கு அடுத்தபடியாக, இந்திய வம்சா வழியினர் அதிகமாக வசிக்கும் தேசங்கள் முக்கியப் பங்கு பெறும்!" என்று ஆவியானவர் திருவுளம் பற்றினார். அதில், **மலேசியா** தேசமும் ஒன்று. எனவே, வருடந்தோறும் மலேசியா தேசத்திற்குச் சென்று, எழுப்புதலுக்கான ஊழியத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

கடந்த 2024 மார்ச் மாதம், **70 ஜெப வீரர்**கள் அந்த தேசமெங்கும் **7 நாட்கள்** '**ஜெப யாத்திரை!**' செய்து, இரவு வேளையில் எழுப்புதலுக்கான கூட்டங்களை நடத்தினார்கள். அதில் பல தேவ ஊழியர்கள் வாஞ்சையோடு வந்து கலந்து கொண்டு மலேசியா தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள்.

## தேவ ஊழியர்களுக்கான கூடுகை!

அந்த தேவ ஊழியர்கள் தொடர்ந்து எழுப்புதலுக்காக தீவிரமாக செயல்பட, கடந்த (2025) மார்ச் 12,13 தேதிகளில் மலேசியா-'**போர்ட் டிக்ஸன்**' என்கிற பட்டணத்தில், **2 நாட்கள்** கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்தில் **தேவ ஊழியர்**களும், **ஊழியக்காரி**களுமாக, சுமார் **47** பேர் கலந்து கொண்டார்கள்.

அந்த 2 நாட்களும் நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், அப்போஸ்தலராகிய பரிசுத்த **பவுலின் வாழ்க்கை**யை மையமாக வைத்து வழங்கிய





தேவ செய்திகள், வந்திருந்த அனைவரையும் அனல் மூட்டி எழுப்பியது. அனைவரும் கர்த்தருக்காக எழுந்து பிரகாசிக்க தங்களை அர்ப்பணித்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள்.

## அற்புத சுகமளிக்கும் கூட்டம்!

அதைத் தொடர்ந்து, முதன்முறையாக மலேசியாவின் கிழக்கு மாநிலங்களான கிறிஸ்தவர்கள் அதிகமாக வசிக்கிற '**சரவாக்**', '**சபா**' ஆகிய 2 மாநிலங்களில் ஊழியத்தை நிறைவேற்ற கடந்து சென்றோம்.

மார்ச் 14ம் தேதியன்று, **சரவாக்** மாநிலம்–'**மீரி**' என்கிற ஒரு பட்டணத்திலுள்ள **Corner Stone Community Church**ல் வைத்து, **அற்புத சுகமளிக்கும் கூட்டம்** ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது.

அந்தக் கூட்டத்திற்கு தேவாலயம் முழுவதும் நிரம்பி வழியும்படியாக ஆத்துமாக்கள் கூடி வந்திருந்தார்கள். '**உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்!**' என்கிற தலைப்பில் நமது சகோதரர் அவர்கள் வழங்கிய தேவ செய்தி, வந்திருந்த ஒவ்வொருவருடைய விசுவாசத்தையும் பெலப்படுத்தியது.



தேவ செய்தியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உதவிய Pr. ஜேசன்



Corner Stone Community Church போதகர்கள், Pr. Sobrina Low மற்றும் Pr. Rachel Bulan ஆகியோருடன் நமது சகோதரர் அவர்கள்



அற்புத சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்ட தேவ பிள்ளைகள்





தேசத்தின் எழுப்புதலுக்காக பாரத்தோடு ஜெபிக்கிறார்கள்

ஜெப வேளையில் கர்த்தருடைய குணமளிக்கிற வல்லமை ஜனங்கள் மத்தியில் கடந்து வந்து அனேகரை குணமாக்கியது! அசுத்த ஆவியின் பிடியிலிருந்த அனேகர் விடுதலை பெற்றார்கள்! அற்புத சுகம் மற்றும் விடுதலை பெற்றவர்களில் அனேகர் சாட்சி சொல்லி, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

## திருச்சபை தலைவர்கள் எழுப்புதல் கூட்டம்!

அடுத்த நாள் மார்ச் 15ம் தேதியன்று காலையில், அதே இடத்தில் வைத்து **திருச்சபை தலைவர்**களுக்கான ஒரு **எழுப்புதல் கூட்டம்** ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. இதில் எழுப்புதலை குறித்து நமது சகோதரர் அவர்கள் வழங்கிய தேவ செய்தியின் மூலமாக, ஆவியானவர் ஒவ்வொருவருக்குள்ளும் எழுப்புதலை பற்றியெரியச் செய்தார். ஜெப வேளையில், ஒவ்வொருவரும் எழுப்புதலுக்கான புதிய அபிஷேகத்தால் நிரப்பப்பட்டார்கள்.

திருச்சபை தலைவர்களுக்கான எழுப்புதல் கூட்டம்



## ஞாயிறு ஆராதனை மற்றும் எழுப்புதல் ஜெபக் கூடுகை!

சரவாக் மாநிலத்தில் ஊழியத்தை முடித்த பிறகு, '**சபா**' மாநிலத்தின் தலைநகரமான, '**கோட்டா கினபாலு**' (Kota Kinabalu) என்கிற ஒரு பட்டணத்திற்கு ஊழியத்தை நிறைவேற்ற கடந்து சென்றோம். மார்ச் 16ம் தேதியன்று S.I.B., திருச்சபையில் வைத்து நடைபெற்ற **ஞாயிறு ஆராதனை**யில் பரிசுத்த ஆவியானவரை குறித்தும், இரவு நடைபெற்ற **எழுப்புதல் ஜெபக் கூடுகை**யில், கடைசிக் கால உலக எழுப்புதலை குறித்தும் நமது சகோதரர் அவர்கள் வழங்கிய தேவ செய்திகள், ஒவ்வொருவருடைய உள்ளத்திலும்





தேவ செய்தியை மலாய் மொழியில் மொழி பெயர்த்து உதவிய சகோ. நாதன்



S.I.B., திருச்சபையின் தலைவர் Rev. Datuk IR Jerry Dusing மற்றும் குழுவினரோடு நமது சகோதரர் அவர்கள்



ஆராதனையில் கூடி வந்த தேவ பிள்ளைகள்

பலமாக கிரியை செய்தது. ஜெப வேளையில் அனேகர் அபிஷேகத்தால் நிரப்பப்பட்டார்கள். எழுப்புதலுக்காக தொடர்ந்து ஜெபிக்கவும் அனேகர் தங்களை அர்ப்பணித்தார்கள்.

## குடும்ப எழுப்புதல் ஆசீர்வாத ஜெபம்!

அதைத் தொடர்ந்து, மார்ச் **18**ம் தேதியன்று **சிலாங்கூர்-சுவாங்ஜெயா–**Full Gospel Tabernacle Churchல் வைத்து நடைபெற்ற **குடும்ப எழுப்புதல் ஆசீர்வாத ஜெபத்தை** கர்த்தர் அபரிவிதமாக ஆசீர்வதித்தார். தேவாலயம் நிரம்பி வழியும்படியாக திரளான தேவ பிள்ளைகள் கூடி வந்தார்கள். பாடல்–ஆராதனையை தொடர்ந்து, '**ஜெபிக்கலாம் வாங்க!**' (நேரலை) நிகழ்ச்சியின் மூலமாக தாங்கள் பெற்ற அற்புதங்களை சிலர் சாட்சியாகப் பகிர்ந்து கொண்டார்கள். அது, வந்திருந்த ஒவ்வொருவருடைய விசுவாசத்தையும் பெலப்படுத்தியது.

இறுதியாக, மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை குறித்து வேதாகமம் தருகிற சில ஆலோசனைகளை நமது சகோதரர் அவர்கள் பகிர்ந்து கொண்டு ஜெபத்தில் வழி நடத்தியபோது, வந்திருந்த ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். குடும்பங்களில் கிரியை செய்து கொண்டிருந்த பிசாசின் வல்லமைகள் அழிக்கப்பட்டது. அனேகர் வியாதியிலிருந்து சுகம் பெற்று, சாட்சி சொல்லி கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.



தேவ செய்தியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உதவிய Pr. ரூபன்



குடும்ப ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க கூடி வந்த தேவ பிள்ளைகள்

மெய்யாகவே மலேசியா தேசத்தில் நடைபெற்ற எல்லா ஊழியங்களையும் கர்த்தர் மகிமையாக ஆசீர்வதித்துக் கொடுத்தார். இந்த ஊழியங்களுக்கான எல்லா விதமான ஏற்பாடுகளையும் சகோதரி **பானு குணபாலன்**, சகோ. **ஜார்ஜ்**, சகோ. **ஜாண் மோசஸ்** மற்றும் '**இயேசு விடுவிக்கிறார்**' குழுவினர் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக! **மலேசியாவிற்காக தொடர்ந்து ஜெபியுங்கள்**. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக! – **ஒருங்கிணைப்பாளர்**.

## மலேசியா தேச ஊழியங்களில் கர்த்தர் எழுப்பிய சாட்சிகளில் சில...

### (37 வருட) பயத்தின் ஆவி விலகியது!

சுமார் **37 வருட**ங்களாக நான் ஒரு **பயத்தின் ஆவி**யினால் பாதிக்கப்பட்டேன்.



**எதற்கெடுத்தாலும் பயப்படுவேன்**. ஜெப வேளையில் ஆவியானவர் என்னை ஆட்கொண்டபோது, எனக்குள்ளிருந்த அந்த **பயத்தின் ஆவி** என்னை விட்டு **வெளியேறிப் போயிற்று**. இப்போது நான் **நிம்மதியாக** இருக்கிறேன். – **முனியம்மாள்**.

### வலிகள் மறைந்தன!



என் **கழுத்து** மற்றும் **முதுகுப்** பகுதியிலுள்ள **எலும்புகளில்** உண்டான **வலி**யினால் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், தேவ வல்லமை என்னை ஆட்கொண்டது. அப்போது **வலி** முற்றிலுமாக **நீங்கி**, சுகத்தைப் பெற்றுக் கொண்டேன். – **மாலதி**.

### பார்வை தெளிவானது!

என் வலது **கண்**ணில் **தெளிவான பார்வை இல்லாமல், 2 மாத**ங்களாக கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், என் வலது கண்ணில் கை வைத்து ஜெபித்து விட்டுப் பார்த்தபோது, **கண் பார்வை தெளிவானது**. – **லட்சுமி**.



### பெயர் சொல்லியழைத்து, சுகம்!

**ஒரு வருட**மாக என் இடது **தலை** பகுதியில் **வலி** இருந்தது.



ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள் ஆவியானவரின் ஏவுதலினால் **என் பெயரைச் சொல்லி அழைத்து**, கர்த்தர் எனக்கு சுகத்தை தருவதாக சொன்னார்கள். அந்த சமயத்தில் ஒரு தேவ வல்லமை என்னை தொட்டபோது, **தலை வலி** முற்றிலுமாக **மறைந்து போனது**. – **பீட்டர் இராஜேந்திரன்**, இலங்கை.

### சிறுநீர் குழாயில் வலி நீங்கியது!

நான் சிறுநீர் கழிக்கும் போதெல்லாம், **சிறுநீர் குழாயில் வலி** உண்டாகும்.

ஜெப வேளையில், விசுவாசத்தோடு ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, **வலியை** முற்றிலுமாக **நீக்கினார்**. – **ஆலிவர்**.



### சிறுநீரகப் பிரச்சனை நீங்கியது!

என் **சிறுநீரகம் செயலிழந்து 3வது கட்டத்திற்கு** வந்து விட்டது. ஜெப வேளையில், ஆவியானவர் என்னை பலமாக ஆட்கொண்டபோது, அந்த **சிறுநீரகப் பிரச்சனை** முற்றிலுமாக **நீங்கி**, **சுகத்தை**ப் பெற்றுக் கொண்டேன். – **சாமுவேல்**.




மலேசியாவில் 'இயேசு விடுவிக்கிறார்'

## உலக எழுப்புதல் ஜெப மையம்!

- மலேசியாவின் இரட்சிப்புக்காகவும்... ▸ திருச்சபைகளின் எழுப்புதலுக்காகவும்...
- உங்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காகவும்... **ஜெபிக்க வாருங்கள்!**

நேரம்: தினமும் காலை 10:00 - மாலை 6:00



Address:
Jesus Redeems Malaysia,
Suite L9-9, Menara Sentral Vista,
150 Jalan Sultan Abdul Samad,
Brickfields (Behind the YMCA),
Kualalumpur, Malaysia-50470.

**நேரில் வந்து ஆலோசனை பெறவும், ஜெபிக்கவும்: +60 10 766 4123 (or) 016 710 41 23.**

# REVIVAL PRAYER TOUR-2025

## இஸ்ரேல் மற்றும் வேதாகம தேசங்களில்

# எழுப்புதல் ஜெப சுற்றுலா!

**எகிப்து,
இஸ்ரேல், பாலஸ்தீனம்,
யோர்தான்.**



## எருசலேமில்

## 12 மணி நேர உபவாச ஜெபம்!

**கெத்செமனே தோட்டத்தில்,
கலிலேயா கடற்கரையில்,
கர்மேல் பர்வதத்தில்,
2 மணி நேர விசேஷித்த
எழுப்புதல் ஜெப நேரங்கள்!**

**யூத மக்கள் மற்றும் பாலஸ்தீன மக்களின் இரட்சிப்பிற்காக, திருச்சபைகளில் காணப்படுகிற சடங்காச்சாரங்கள் நீங்கி, எழுப்புதல் உண்டாக...**

**2025 செப்டம்பர் 8 முதல், செப்டம்பர் 18 வரை**
(10 இரவுகள், 11 நாட்கள்)

- சிதேக்கியா குகையில் ஜெபம்!
- இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த இடத்தில் திருவிருந்து ஆராதனை!
- **பார்க்க இருக்கும் விசேஷித்த இடங்கள்:** எருசலேம், பெத்லகேம், எரிகோ, நாசரேத், கானா, யோப்பா, கலிலேயா மற்றும் இன்னும் பார்த்திராத அனேக புதிய இடங்கள்!
- ஒலிவ மலை, சீயோன் மலை, மோரியா மலை, கல்வாரி மலை, கர்மேல் மலை, நேபோ மலை மற்றும் பல மலைகள்!
- கலிலேயா கடல், சவக் கடல், மத்திய தரைக் கடல், யோர்தான் நதி, இயேசு கிறிஸ்து நடந்து சென்ற மற்றும் அற்புதங்களைச் செய்த இடங்களைப் பார்க்கலாம்!
- எகிப்து பிரமிடுகள், நைல் நதி, செங்கடல், சீனாய் மலை மற்றும் விசேஷித்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள்.

**முன்பதிவு செய்து, முழு கட்டணத்தையும் செலுத்துபவர்கள் மட்டுமே அழைத்துச் செல்லப்படுவார்கள்.**

**12 மணி நேர உபவாச ஜெபம் மற்றும் 2 அல்லது 3 மணி நேர ஜெபங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிற காரணத்தினால், சிறு குழந்தைகள் மற்றும் கைக் குழந்தைகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

**மேலும், 69 வயதிற்கு மேற்பட்டவர்கள், தங்கள் உதவிக்கு ஒரு நபரை அழைத்து வந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.**

**ஜெப சுற்றுலாவுக்கான சுற்றுப் பயணம், யோர்தான் தேசம் தொடங்கி, எகிப்து தேசத்தில் முடிவடையும்.**

## ஜெபிக்க வாருங்கள்!

**இஸ்ரேல், யோர்தான்** மற்றும் **எகிப்து** விசா, தங்குவதற்கான **3 நட்சத்திர ஹோட்டல்**, 3 வேளை **உணவு**, பிரயாணத்திற்கு **A/C பஸ்**, சுற்றுலா இடங்களுக்கான **நுழைவுக் கட்டணம்** மற்றும் **எல்லா செலவுகளும் இதில் அடக்கம்.** விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள, இங்கே கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்களில் உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

தேவ செய்தியும், ஜெபமும்:
**சகோ. மோகன் சி. லாசரஸ்.**

**Contact:**

| Nalumavadi | Chennai | Bengaluru | Olive Tours |
|---|---|---|---|
| Sis. Esther D | Sis. Vinolin S | Bro. Selwyn P | Bro. Maruthanayagam D |
| +91 8300 186 000 | +91 99422 55881 | +91 99800 10756. | +91 93441 81949. |

**Email: olivettrs@gmail.com, olivettrs@yahoo.com**

## நாலுமாவடி – திறப்பின் வாசல் ஜெப சாட்சிகள்!

# பயப்படாதிருங்கள், நீங்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை!

(ஏசாயா 54:4)



இன்றைக்கு ஏதோவொரு பிரச்சனை உங்களை கலங்கப் பண்ணிக் கொண்டிருக்கலாம்! **கலங்காதீர்கள்!** ஏனென்றால், **கர்த்தர் உங்களை வெட்கப்பட விட மாட்டார்.** அதற்காக நீங்கள் ஜெபித்தால், கர்த்தர் உங்களுக்கு அற்புதம் செய்வார்.

திறப்பின் வாசல் ஜெபத்தில் உங்களுக்காக ஜெபிக்க, நாங்களும் ஆயத்தமாக இருக்கிறோம். கடந்த நாட்களில் ஜெபித்து, கர்த்தரிடத்திலிருந்து அற்புதத்தைப் பெற்றுக் கொண்டவர்களில் சிலரது அனுபவ சாட்சிகளைப் பாருங்கள்:

### வேதனைகள் நீங்கியது!



என் **முதுகுத் தண்டில்** ஏற்பட்ட ஒரு **பிரச்சனை**யினால், சுமார் 4 வருடங்களாக **கால்**கள் மற்றும் **பாதங்களில்** மிகுந்த **வேதனை**யோடு இருந்தேன்.

ஜெப வேளையில், நமது சகோதரர் அவர்கள் சொன்னபடியே அந்தப் பகுதியில் என் கைகளை வைத்து நான் ஜெபித்தேன். அப்போது ஒரு தேவ வல்லமை என்னைத் தொட்டு, எல்லா **வேதனைகளை**யும் முற்றிலுமாக **நீக்கிப் போட்டது**. – **ராஜன்**, கள்ளக்குறிச்சி.

### பார்வை தெளிவாயிற்று!



என் வலது **கண்ணில் ஆபரேஷன்** செய்தும், ஒரு வருடமாக **தெளிவான பார்வை இல்லாமல்** கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள் சொன்னபடி, அந்தக் கண்ணில் என் கையை வைத்து நான் ஜெபித்தபோது ஒரு தேவ வல்லமை என்னை நிரப்பியது. அந்நேரமே **பார்வை தெளிவாயிற்று**. – **மேரி**, திருவாரூர்.



**ஒவ்வாமை**யின் நிமித்தமாக, என் **2 கண்**களிலும் **தெளிவான பார்வை இல்லாமல்**, சுமார் **6 வருட**ங்களாக கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில் கண்களில் நான் கைகளை வைத்து ஜெபித்தபோது, கர்த்தர் **தெளிவான பார்வை**யைக் கொடுத்தார். – **எபினேசர்**, ஊட்டி.

### செவிட்டுக் காதுகள் திறந்தன!



என் **2 காது**களும் திடீரென **கேட்கும் திறனை இழந்து**, 2 வருடங்களாக மிகவும் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், காதுகளில் நான் கை வைத்து ஜெபித்தபோது, **தெளிவாக கேட்கும் திறனை** கர்த்தர் கொடுத்தார். – **திருமால்**, திருப்பூர்.

### பூரண விடுதலை!



என் **இடுப்புக்கு கீழ்** 2 வருடங்களாக பயங்கரமான **வலி** இருந்தது. அந்த வலியின் நிமித்தமாக, என்னால் **நிம்மதியாக தூங்க முடியவில்லை**. டாக்டர்கள், "உங்களுக்கு எந்தவொரு

பிரச்சனையும் இல்லை!" என்றுதான் சொன்னார்கள். ஜெப வேளையில், ஆவியானவர் என்னை பலமாக ஆட்கொண்டபோது, **எனக்குள் ஒரு மாற்றம்** உண்டானதை உணர்ந்தேன். அந்நேரமே அந்த **வலி**யிலிருந்து **பூரண விடுதலை**யைப் பெற்றுக் கொண்டேன்.
– **ஜெயராஜ்**, திருப்பூர்.



### வீக்கம் மறைந்து, நடந்தேன்!

என் **கால்**களில் இருந்த **வீக்கத்தினால்**, சுமார் **3 வருட**ங்களாக **நொண்டி நொண்டி**த்தான் நடந்தேன். ஜெப வேளையில் ஆவியானவர் என்னை நிரப்பியபோது, **கால் வீக்கம் மறைந்து**, நன்றாக **நடக்க ஆரம்பித்தேன்**. – **சாராள்**, கரூர்.



### கால் வலி நீங்கியது!

என் வலது காலில் இருந்த கடுமையான **வலியினால், 2 வருட**ங்களாக **நடக்க முடியாமல்** கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், தேவ பிரசன்னம் என்னை ஆட்கொண்ட அந்நேரமே, **கால் வலி** முற்றிலுமாக **நீங்கி**, என்னால் **நடக்க முடிந்தது**.
– **மரியாள்**, சங்கரன்கோவில்.



### (10 வருட) பிரச்சனை நீங்கியது!

என் **2 கை**களையும் **உயர்த்த முடியாமல்**, சுமார் **10 வருட**ங்களாக கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், ஒரு தேவ வல்லமை என்னை ஆட்கொண்டது. அதற்குப் பிறகு **கைகளை** என்னால் நன்றாக **உயர்த்த முடிகிறது**. – **மேரி**, தேனி.

### கட்டிகள் மறைந்தன!



என் **மார்பில்** இருந்த ஒரு **கட்டி**யினால், ஒரு வருடமாக மிகவும் **வேதனை**ப்பட்டேன். எவ்வளவோ மாத்திரைகளை சாப்பிட்டும், பிரயோஜனமில்லை. **வலியோடுதான்** ஜெபத்தில் கலந்து கொண்டேன். ஜெப வேளையில் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, கர்த்தர் அந்தக் **கட்டி**யை **மறையப் பண்ணினார்**. – **தேவிகா**, ஈரோடு.



என் **நெஞ்சுப் பகுதி**யில் இருந்த ஒரு **கட்டி**யினால், சுமார் **7 வருட**ங்களாக **எப்போதும் வலி** இருந்து கொண்டே இருந்தது. ஜெப வேளையில் ஒரு தேவ வல்லமை என்னைத் தொட்டதை உணர்ந்தேன். அப்பொழுதே அந்தக் **கட்டி மறைந்து போனது**. – **செல்வராஜ்**, கடலூர்.

**பாருங்கள்,**
இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய **இயேசு கிறிஸ்து, உங்களுக்கும் அற்புதம் செய்வார்!** உங்கள் காரியம் எதுவாக இருந்தாலும், அந்தக் காரியத்தை கடிதத்தில் எழுதி, பின்கோடுடன் கூடிய உங்கள் தெளிவான முகவரியோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

**நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.** நீங்களும் இந்த நாளில் உபவாசித்து, **விசுவாசத்தோடு ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்து** உங்களுக்கும் அற்புதம் செய்து, **உங்கள் துக்கத்தை மாற்றுவார்.** திறப்பின் வாசல் ஜெப தினத்தன்று, காலை 9:00 – மதியம் 3:00 மணிவரை ஜெபிப்போம். **நீங்களும் இதே நேரத்தில் எங்கிருந்தாலும் ஜெபியுங்கள்.** ஜெபத்தில் கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

– உங்கள் சகோதரன்.

**Address:**
**Standing in the Gap Prayer,**
**Nalumavadi-628 211,**
**Thoothukudi Dist., India.**

உங்கள் அற்புதத்தின் நாள்:
**நாலுமாவடி – திறப்பின் வாசல் ஜெபம்!**
**ஜூன் 28**
(கடைசி சனிக்கிழமை)

## திருமங்கலம் (மதுரை)

# வாலிபர்களை நிரப்பிய தேவ வல்லமை!




கடந்த (2025) மே 1ம் தேதியன்று, (மதுரை)–**திருமங்கலம்**–C.S.I., **காட்டு பங்களா** வளாகத்தில் (காலை 10:00 - மாலை 5:00) நடைபெற்ற **வாலிபர் எழுப்புதல் உபவாச ஜெபத்தை** கர்த்தர் அபரிவிதமாக ஆசீர்வதித்தார். இந்த ஜெபத்தில் தமிழ்நாட்டைச் சார்ந்த சுமார் **20,000**க்கும் அதிகமான வாலிப சகோதர, சகோதரிகள் மிகுந்த வாஞ்சையோடும், உபவாசத்தோடும் வந்து கலந்து கொண்டார்கள்.

இந்த உபவாச ஜெபத்திற்கான சகல ஏற்பாடுகளையும், சகோ. **டேவிட் கணேசன்** (கிராம மிஷனெரி இயக்கம், விருதுநகர்)





அவர்கள் தலைமையிலான கிராம மிஷனெரி இயக்க ஊழியர்கள் மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள்.

மதுரை–இராமநாதபுரம் C.S.I., திருமண்டல **பேராயர்**, Rt. Rev. Dr. **ஜெயசிங் பிரின்ஸ் பிரபாகரன்** அவர்கள் இந்த ஜெபத்தில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியது, மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது.

பாடல்–ஆராதனை, ஜெபம் மற்றும் சாட்சி வேளைகளை கிராம மிஷனெரி இயக்க ஊழியக் குழுவினர் மிகச் சிறப்பாக நடத்தினார்கள்.

சகோ. டேவிட் கணேசன் அவர்கள், '**ஜெபி!**', '**தெருவுக்கு வா!**', '**பிரசங்கம் பண்ணு!**', '**கைகளை வை!**' என்கிற தலைப்பில் எளிய முறையில் வழங்கிய தேவ செய்தியானது, அனைத்து வாலிபர்களையும் அனல் மூட்டி எழுப்பியது.

இறுதியாக நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், மதுரை மாவட்டத்தின் எழுப்புதலுக்காக ஜெபங்களை ஏறெடுத்து, தேவ செய்தியளித்தார்கள். செய்தி வேளையின் ஆரம்பத்திலேயே ஆவியானவரின் கிரியை பலமாக வெளிப்பட்டது.

அப்போது ஆவியானவர் நமது சகோதரர் அவர்கள் மூலமாக, அனேக வாலிபர்களை குறித்த காரியங்களை வெளிப்படுத்திச் சொல்லி, அனேக வாலிபர்களின் பெயர்களையும் குறிப்பிட்டுச் சொல்லி அழைத்து, அவர்களை கர்த்தருக்குள் பெலப்படுத்தினார்கள்.

மட்டுமல்ல, நமது சகோதரர் அவர்கள் தானியேலினுடைய ஜெப வாழ்க்கையின் 7 படிகளின் அடிப்படையில் தேவ செய்தியை பகிர்ந்து கொண்டு ஜெபத்தில் வழி நடத்தியபொழுது, அனைவரும் ஜெப ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். தேவ வல்லமையால் நிரப்பப்பட்ட வாலிபர்கள், ஒருவர் மீது ஒருவர் கை வைத்து ஜெபித்தபொழுது ஆவியானவர் பலத்த அற்புதங்களை செய்தார். அற்புதத்தைப் பெற்றுக் கொண்டவர்களில் அனேகர் சாட்சி சொல்லி, கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

"கிராமப் புறப் பகுதியிலுள்ள, சிறு பிள்ளைகள், வாலிபர்கள் மற்றும் குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்கிற ஒரே நோக்கத்தோடு செயல்பட்டு வருகிற **கிராம மிஷனெரி இயக்க ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.**

**- ஒருங்கிணைப்பாளர்.**



# வாலிபர் எழுப்புதல் உபவாச ஜெபத்தில் கர்த்தர் எழுப்பிய சாட்சிகளில் சில...

## மூட்டு வலி நீங்கியது!



என் 2 முழங்கால்களிலும் இருந்த **மூட்டு வலி**யினால் ஒரு மாதமாக **வேதனை**ப்பட்டேன். ஜெப வேளையில் தேவ வல்லமை என் மீது பலமாக இறங்கியது. அந்நேரமே **மூட்டு வலி** முற்றிலுமாக **நீங்கியது**.

– **மூக்கா**, மதுரை.

## இரட்டிப்பான அற்புதம்!



என் 2 கண்களிலும் **தூரப் பார்வை தெளிவாக இல்லாமல்** 2½ வருடங்களாக கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், ஒரு ஒளி என் கண்களில் பட்டது. அந்நேரமே **தெளிவான பார்வை**யைப் பெற்றுக் கொண்டேன்.

மட்டுமல்ல, என் இடது கையின் **அக்குள் பகுதியில்**, ஒரு **கட்டி** இருந்தது. அதை ஆபரேஷன் பண்ணி எடுத்த பிறகும், கையை அசைக்கும் போதெல்லாம் கடுமையாக வலிக்கும். ஜெப வேளையில், கர்த்தர் அந்த **வலியை** முற்றிலுமாக **நீக்கினார்**.

– **ராசாத்தி**, சங்கரன்கோவில்.

## மூக்கடைப்பு நீங்கியது!



என் மூக்கின் வலது பக்க துவாரத்திலுள்ள ஒரு **எலும்பு வளைந்திருந்த நிலைமை**யில், 8 மாதங்களாக **மூக்கடைப்பினால்** கஷ்டப்பட்டேன். டாக்டர்கள், "இதை சரி செய்ய முடியாது!" என்று சொல்லி விட்டார்கள். எப்போதும் மூக்கடைப்பு இருந்தபடியினால், சரியாக **தூங்க முடியாமல்** மிகவும் கஷ்டப்பட்டேன்.

ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள், ஒருவர் மீது ஒருவர் கை வைத்து ஜெபிக்கச் சொன்னார்கள். அப்போது ஆவியானவரின் வல்லமை என்னை பலமாக ஆட்கொண்டது. அந்நேரமே, **மூக்கடைப்பு** முற்றிலுமாக **நீங்கிப் போயிற்று**. – **ஹெப்சிபா**, கடமலைக்குன்று.

## (4 வருட) இரைச்சல் நீங்கியது!



சுமார் **4 வருட**ங்களாக என் இடது **காதுக்குள்** எப்போதும் ஒரு விதமான **இரைச்சல் சத்தம்** கேட்டுக் கொண்டே இருந்தது. அதனால் அந்தக் காது **தெளிவாகவும் கேட்காது**. ஜெப நேரத்தில் ஒரு தேவ வல்லமை என்னைத் தொட்டபோது. அந்த **இரைச்சல் நீங்கி, காதும் தெளிவாக கேட்கிறது**. – **லாவண்ணி**, மதுரை.

## தூரப் பார்வை தெளிவானது!



என் 2 கண்களிலும் இருந்த **தூரப் பார்வை பிரச்சனை**யின் நிமித்தமாக, சுமார் **8 வருட**ங்களாக கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில் ஜெபித்து விட்டு கண்களை திறந்து பார்த்தபோது, கர்த்தர் **தெளிவான பார்வை**யைக் கொடுத்தார்.

– **மேரி**, திருமங்கலம்.

## (30 வருட) கட்டியும், வீக்கமும் மறைந்தது!



என் **வயிற்றில்** சுமார் **30 வருட**ங்களாக ஒரு **கட்டி** இருந்தது. எப்போதும் **வலி**த்துக் கொண்டே இருக்கும். மட்டுமல்ல, என் இடது **தோள்பட்டை வீங்கி**, அதுவும் **வலி**த்துக் கொண்டே இருந்தது. ஜெப வேளையில், இந்த இரண்டிற்காகவும் நான் ஜெபித்து முடித்தபோது, **வீக்கமும், கட்டியும் மறைந்து** போனது. – **ஜானகி**, திருவாரூர்.

## பார்வை தெளிவாகி, தலை வலி நீங்கியது!



எனக்கிருந்த **தூரப் பார்வை பிரச்சனை**யின் நிமித்தமாக, சுமார் **8 வருட**ங்களாக எப்போதும் **தலை வலி** இருந்தது. ஜெப வேளையில், ஒரு சகோதரர் என் தலையின் மீது கை வைத்து ஜெபித்தார்கள்.

அந்நேரமே **பார்வை தெளிவாகி, தலை வலியும் சுகமானது**. – **ஆரோக்கியசாமி**, இராஜபாளையம்.

# செய்திகள்

## மருந்தின் Brand பெயர் எழுத டாக்டர்களுக்கு தடை!

"டாக்டர்கள் மருந்துகளை பரிந்துரைக்கும்போது, Brand பெயர்களை குறிப்பிடாமல், Generic **மருந்துகளின் பெயர்களை மட்டுமே பரிந்துரைக்க வேண்டும்.**" என, உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் மருந்துகளில், 'Branded மருந்துகள்', 'Generic மருந்துகள்' என, இரண்டு வகைகள் உள்ளன. இந்த Branded வகை மருந்துகள், உள் நாடு மற்றும் வெளி நாடுகளைச் சேர்ந்த பெரு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படுகின்றன.

அதே, Branded மருந்துகளிலுள்ள மருத்துவ மூலப் பொருட்களை உடைய மருந்துகள், பல்வேறு சிறு நிறுவனங்களால் உள் நாட்டில் தயாரிக்கப்பட்டு, வேறு பெயர்களில் விற்பனை செய்யப்படுகின்றன. இவை, 'Generic மருந்துகள்' என்று அழைக்கப்படுகிறது.

உதாரணத்திற்கு, 'Paracetamol' என்பது, Brand பெயரல்ல. அது, மருத்துவ மூலப் பொருளை குறிக்கும் ஒரு பொதுவான பெயர். ஆனால், 'Dolo-650', 'Crocin', 'Metacin' போன்றவை Brandகளின் பெயர்கள்.

Branded மருந்துகளை விட, Generic மருந்துகள் பன்மடங்கு விலை குறைவாக விற்கப்படுகிறது. ஒருசில உடல் நலக் கோளாறுகளுக்கு, குறிப்பாக புற்று நோய் போன்ற தீவிரமான நோய்களுக்கு சந்தையில் விற்கப்படும் மருந்துகள் அதிக விலை உடையவை.

ஆகவே, Generic மருந்தாக வாங்கினால், அவை குறைவான விலையில் கிடைக்கிறது. இதனால், Generic மருந்துகளை மக்கள் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது. மேலும், பல கோடி ரூபாய்களை முதலீடு செய்யும் மருத்துவப் பெரு நிறுவனங்கள், தங்கள் Brandகளை சந்தைப்படுத்த அதிரடியான மார்க்கெட்டிங் உத்திகளை செயல்படுத்துகின்றன.

மருந்து நிறுவனங்களின் நெறிமுறையற்ற சந்தைப்படுத்துதல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்தக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், "டாக்டர்களுக்கு மருந்து நிறுவனங்கள் லஞ்சம் கொடுத்து, அதிகப்படியான மருந்துகளை எழுத அழுத்தம் கொடுக்கின்றன. அதிக விலையுடைய மருந்து Brandகளை பரிந்துரைக்கவும் வலியுறுத்துகின்றன. இது சாதாரண மக்களுக்கு மருத்துவச் செலவுகளை அதிகரிக்கிறது.

அது மட்டுமின்றி, அவர்களுக்கு எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தி விடுகிறது. எனவே, மருந்து நிறுவனங்களில் சந்தைப்படுத்துதல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்த வேண்டும்." என குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்த மனு உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் **விக்ரம்நாத், சஞ்சய் கரோல், சந்தீப் மேத்தா** ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு முன்பாக விசாரணைக்கு வந்தது.



மனுதாரர் தரப்பில் வாதாடிய வழக்கறிஞர், "பிரபல காய்ச்சல் மருந்தான, 'Dolo-650'யை டாக்டர்களுக்கு இலவசமாக வினியோகிக்க, மருந்து தயாரிப்பு நிறுவனம் ₹ 1,000 கோடி செலவிட்டதாக மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது." என குறிப்பிட்டார்.

இதையடுத்து **நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:**

"Generic மருந்துகளை டாக்டர்கள் பரிந்துரைக்க, ஒரு சட்டப்பூர்வ ஆணை அவசியம். அது இருந்தால், டாக்டர்களுக்கு லஞ்சம் கொடுத்ததாக கூறப்படும் மருந்து நிறுவனங்கள் தொடர்பான பிரச்சனைகள் தீர்க்கப்படும்.

அது மட்டுமின்றி, மருந்துகளின் Brand பெயர்களை குறிப்பிடாமல், Generic மருந்துகளின் பெயர்களை மட்டுமே டாக்டர்கள் பரிந்துரைக்க வேண்டும்.

இராஜஸ்தானில், 'ஒவ்வொரு டாக்டரும், Generic மருந்தை மட்டுமே பரிந்துரைக்க வேண்டும்.' என்கிற ஒரு நிர்வாக உத்தரவு அமலில் உள்ளது. அவர்கள் எந்த நிறுவனத்தின் பெயர்களையும் பரிந்துரைக்க முடியாது.

இந்த உத்தரவு நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டால், மிகப் பெரிய மாற்றம் ஏற்படும்." என்று, உத்தரவில் குறிப்பிடப்பட்டு உள்ளது. (நன்றி: தினமலர், 2025 மே 3, பக்கம் 7).

**(மருத்துவ உலகத்தில் காணப்படுகிற நெறிமுறையற்ற குளறுபடிகள் எல்லாம் சரி செய்யப்பட்டு, மனித உயிர்களை காக்கும் மருத்துவம் தேசத்தில் உண்மையாக செயல்பட பாரத்தோடு ஜெபிப்போம்.)**

**இயேசு விடுவிக்கிறார்,**
நாலுமாவடி - 628 211,
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

Office: (+91) **04639 - 35 33 33**
Email: prayer@jesusredeems.org
Visit: www.jesusredeems.com

உங்கள் அவசர ஜெப அழைப்பிற்கு 24 மணி நேரமும்
**(+91) 04639 -35 35 35** (அல்லது) **22 00 00**
என்ற இந்த எண்களில் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

## உலக எழுப்புதல் ஜெப மையங்கள்!

செங்கல்பட்டு - 95975 88831
கடலூர் - 99651 44000
திண்டுக்கல் - 63830 15262
ஈரோடு - 97507 22000, 0424-22 11 800
காஞ்சிபுரம் - 89036 35315, 044-272 33 760
காரைக்குடி - 80122 11022
கரூர் - 94886 18305
ஊட்டி - 94423 48999, 0423-244 18 19
பெரம்பலூர் - 97887 88512, 04328-22 44 28
சேலம் - 83000 19710
சிவகாசி - 94429 06567, 04562-27 65 67
தஞ்சாவூர் - 94443 81971, 04362-23 33 34
திருவாரூர் - 99767 66322, 04366-25 05 61
திருவண்ணாமலை - 94882 00305
வேளாங்கண்ணி - 97158 33000
வேலூர் - 94429 79556, 0416-22 41 556
விழுப்புரம் - 83444 11022

**தூத்துக்குடியில்**
போல்டன்புரம் - 0461-233 97 43
ஆசிரியர் காலனி - 83441 16000

**நாமக்கல்லில்**
நாமக்கல் - 94886 18305
பள்ளிப்பாளையம் - 63815 12158

**தேனியில்**
தேனி - 99767 66422, 04546-25 53 35
பெரியகுளம் - 94881 45305

**திருப்பூரில்**
திருப்பூர் - 94420 82200, 0421-22 333 45
தாராபுரம் - 83003 60315

**இராணிபேட்டையில்**
இராணிபேட்டை - 95002 83179, 04172-27 36 63
அரக்கோணம் - 63819 42472

**கோவையில்**
கோவை - 89034 05315, 0422-230 90 40
பொள்ளாச்சி - 94878 56205

**உலக எழுப்புதல் ஜெப கோபுரங்கள்**
தர்மபுரி- 95242 20022
திருச்சி- 94884 30305

**திருவள்ளூரில்**
திருவள்ளூர் - 70105 86464, 044-2766 55 86
திருத்தணி - 83449 49444

**கிருஷ்ணகிரியில்**
கிருஷ்ணகிரி - 95249 99711
ஓசூர் - 95249 99722, 04344-22 45 00

**திருச்சியில்**
தென்னூர் - 83441 19000, 0431-274 10 25
தில்லை நகர் - 94433 40647

**திருநெல்வேலியில்**
பாளையங்கோட்டை - 90474 80484, 0462-25 77 484
திசையன்விளை - 94878 10845
வள்ளியூர் - 94887 03188

**தென்காசியில்**
ஆலங்குளம் - 99653 77427
சுரண்டை - 83445 22555
சங்கரன்கோவில் - 83449 49555
தென்காசி - 99653 56777

**கன்னியாகுமரியில்**
நாகர்கோவில் - 89032 79469, 04652-27 94 69
மார்த்தாண்டம் - 94867 06832, 04651-20 52 11

**மதுரையில்**
சின்ன சொக்கிகுளம் - 95244 15150, 0452-25 31 305
சுப்ரமணியபுரம் - 89735 33000, 0452-26 77 300

**சென்னையில்**
ஆதம்பாக்கம் - 83444 33116, 044-421 300 56
அம்பத்தூர் - 93846 72249, 044-26 24 1070
எழும்பூர் - 94879 62305
புரசைவாக்கம் - 94876 68705, 044-435 777 68
இராயபுரம் - 83444 83222, 044-259 857 53
தாம்பரம் - 94885 29099, 044-222 613 99
விருகம்பாக்கம் - 044-23 77 2339

**ஆசீர்வாதமான சென்னை ஜெப மையம்**
மவுண்ட் ரோடு- 044-450 16 562

**வெளி மாநிலங்களில்**
சண்டிகர் - 94177 26492
டில்லி - 011-355 80 428
புதுச்சேரி - 83444 33800
ராஞ்சி - 95233 36010

**தெலுங்கானாவில்**
ஐதராபாத் - 81060 82222
செகந்திராபாத் - 91778 35305

**ஆந்திராவில்**
சித்தூர் - 94877 34603
திருப்பதி - 94889 38305

**மும்பையில்**
தாராவி - 80824 10410
மலாடு - 96640 50567

**கேரளாவில்**
கொச்சி - 94966 53183
கோட்டயம் - 94967 44001
திருவனந்தபுரம் - 92497 18266, 0471-233 13 92

**கர்நாடகாவில்**
சிவாஜி நகர் - 96328 14414, 080-3545 45 45
பிரேசர் டவுண் - 95910 77110
ஹாசன் - 94497 40391
மைசூரு - 98863 11777
தும்கூரு - 77957 73773
கோனன்குண்டே - 080-796 924 10
KGF - 93537 10498

**வெளி நாடுகளில்**
ஆஸ்திரேலியா - +61 421 949 920
கனடா - +1(416)806-2410
துபாய் - +97 150 5516 534
மலேசியா - +60 10 766 4123, +016-710 4123
நியூசிலாந்து - +64 953 74 133
சிங்கப்பூர் - +65 819 25 231

**அமெரிக்காவில்**
கலிபோர்னியா - +1408 329 6899
மேரிலேண்டு - +1240 481 5268

**இலங்கையில்**
கொழும்பு - (+94)0112 930152
திருகோணமலை - (+94)071 0690 909, (+94)026 222 1880

**ஜெப மலை**
83 00 131 000, 04634-240 245

உங்களது அவசர ஜெபக் குறிப்புகளை 24 மணி நேரமும் **Whatsapp** மூலமாக தெரியப்படுத்த,
**+ 91 94 88 17 53 15.**
(இந்த எண்ணை ஜெபக் குறிப்புகளை அனுப்ப மட்டுமே பயன்படுத்தவும்.)

Our Website

Owned and Published by Bro. Mohan C. Lazarus, Printed by Sis. Joyce Lazarus at Nalumavadi - 13/81, Lakshmipuram, Angel Press and released through Nalumavadi-Jesus Redeems. Editor: Bro. Mohan C. Lazarus

'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தின்

## உலகளாவிய இந்த எழுப்புதல் திட்டத்தில்

# நீங்களும் பங்காற்றலாம்!

நமது **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியத்திற்கென்று காணிக்கை அனுப்ப விரும்புகிறவர்கள், **கீழ்கண்ட வழி முறைகளில் காணிக்கை அனுப்பலாம்.**

**1)** UPI Pay through UPI

**Account Name:** JESUS REDEEMS

**UPI Id:** JESUSREDEEMS@SBI

G Pay, Paytm, PhonePe, BHIM

**2)** இணையதளம் (Website): www.jesusredeems.com

**3)** **Bank Transfer:**

| | |
|---|---|
| Bank Name | : Tamilnad Mercantile Bank Ltd., |
| Branch | : Nalumavadi. |
| A/C Name | : Jesus Redeems. |
| A/C No. | : 4491 50310 875001. |
| IFSC Code | : TMBL0000449. |

**4)**

| | |
|---|---|
| காசோலை (Cheque): | Jesus Redeems. |
| வரைவோலை (Demand Draft): | Jesus Redeems (or) Mohan C. Lazarus. |

**5)** மணியார்டர் E.M.O.

*To Address:* Bro. Mohan C. Lazarus,
Jesus Redeems,
Nalumavadi - 628211,
Thoothukudi Dist., T.N., India.

**காணிக்கை அனுப்பிய பின்பு, அதைக் குறித்த விபரத்தை 89038 35315** என்கிற இந்த எண்ணில் **தொடர்பு கொண்டோ,** அல்லது **இதே எண்ணிற்கு WhatsApp** மூலமாகவோ, அல்லது **accounts@jesusredeems.org** மூலமாகவோ **எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.**

# வாங்கி விட்டீர்களா?
# இதோ, உங்களுக்காக

**'இயேசு விடுவிக்கிறார்'**
வழங்கும்




- இந்த எழுப்புதல் நாட்களில், கர்த்தர், தம்முடைய பிள்ளைகள் யாவரும் வரங்களைப் பெற்று, தமக்காக எழும்பிப் பிரகாசிக்க வேண்டுமென்று விரும்புகிறார்.
- வரங்கள் அனைத்தும் தேவ ஊழியர்களுக்கு மட்டும் உரியதல்ல! அவைகள் ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் கூட உரியது!
- ஆகவே, இந்தப் புத்தகத்தில் வரங்களைக் குறித்தும், அதைப் பெற்றுக் கொள்கிற விதத்தைக் குறித்தும், நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவர் மிகத் தெளிவாக விளக்கிச் சொல்லி இருக்கிறார்.
- வாங்கிப் படியுங்கள்! வல்லமையைப் பெற்று கர்த்தருக்காக எழும்பிப் பிரகாசியுங்கள்! **மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்!**

**நேரில் பெற: ₹100/-**

**தபாலில் பெற: ₹160/-**

**எமது தலைமை மற்றும் எல்லா உலக எழுப்புதல் ஜெப மையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.**

**தொடர்புக்கு: 83000 11234.**

Online Shopping:
www.jrbibleworld.in (India)
www.jrbibleworld.com (Overseas)

AVAILABLE ON: amazon Flipkart amazonkindle

Registered with Registered News Paper of India No: 42579/83.
Postal Registration No: TTN/145/2024-2026
Overseas Registration No: TTN/241/2024-2026
Licensed to Post Without Prepayment No: TN/WPP-33/SR/2024-2026
Date of Publication: 25-05-2025.
Date of Posting: 27th to 30th of every month.
Office of Posting: BPC, Tuticorin HO - 628 001.

COMFORTER DIGITAL CHANNEL மற்றும் 'இயேசு விடுவிக்கிறார்' சமூக வலைத் தளங்களில்

# உங்களுக்கான அனுதின நற்செய்தி!



## WALK WITH JESUS!

தினமும் அதிகாலை
5:00 மணிக்கு

**காணத் தவறாதீர்கள்!**

தேவ செய்தியும், ஜெபமும்:
சகோ. **மோகன் சி. லாசரஸ்**

**13 மொழிகளில்...**
தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம், மலையாளம், தெலுங்கு, பஞ்சாபி, பெங்காளி, சிங்களம், குஜராத்தி, மராத்தி, பிரஞ்சு, ஜெர்மன்.

உங்கள் Cell Phoneல் நேரடியாக பெற்றுக் கொள்ள +91 89265 89265 என்கிற WhatsApp எண்ணில் தொடர்பு கொள்ளவும். அல்லது QR Codeஐ Scan செய்யவும்.

GET IT ON Google Play

கடைசிக் கால எழுப்புதலில்
evangel OTT

இது ஒரு பொதுவான கிறிஸ்தவ சமூக வலைத்தளம்.

GET IT ON App Store

அனைத்து கிறிஸ்தவ தொலைக்காட்சி நிறுவனங்களும் ஒரே தளத்தில்...
இன்றே உங்கள் Android, iOS Mobileலில் App-ஐ download செய்து பயன் பெறுங்கள்.

Comforter RADIO

உங்கள் கவலைகள் களிப்பாக மாற...
## Comforter ரேடியோ
கடைசிக் கால எழுப்புதல் வானொலி

24/7 கேட்கலாம் ரசிக்கலாம்



தமிழ் மற்றும் கன்னட மொழிகளில் பல்சுவை நிகழ்ச்சிகள்

**Download Our App Today**

GET IT ON Google Play   GET IT ON App Store

Website:
www.comforter.fm